DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

CC.No.211/2023

Deposition of witness for Prosecution அ.சா.3

பெயர்	:	இந்திரா
தகப்பனார்/கணவர் பெயர்	:	திருமுருகன்
கிராமம்	:	
தாலுகா	:	
தொழில்	:	
வயது	:	

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 05.02.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் பள்ளத்தூரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் அக்கா. எதிரிகளை தெரியும். கடந்த 30.05.2023 ம் தேதி பக்கத்து வீட்டில் நடந்த இறப்பிற்காக வந்திருந்தோம். என் தம்பி மகேஷ்வரனும் வந்திருந்தான். மகேஷ்வரன் இறப்பு வீட்டிற்கு சென்ற இடத்தில் எதிரிகள் இருவரும் பிரச்சனை செய்துள்ளார்கள். அப்போது நானும் அ.சா.1 ம் பொற்கலைச்செல்வியும் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தோம். அப்போது 2 வது எதிரி என் தம்பிக்கு திருமணம் செய்யப்படாமல் இருப்பதை குத்திக்காட்டி பொட்டைபயலே என்று பேசினார். அ.சா.1 மரியாதையாக பேசு என்று சொன்னார். அப்போது இரு எதிரிகளும் தேவிடியா என்று கெட்டவார்த்தை பேசினார்கள். 2 ம் எதிரி பாஸ்கர் கட்டையை எடுத்து வந்து அ.சா.1 ஐ தலையில் அடித்தார். நான் விழக்க போன போது 1 ம் எதிரி அ.சா.1 ன் தலைமுடியை பிடித்து அடித்தார். நான் விலக்க போன போது 2 ம் எதிரி எனது தாலிச்செயினை

பிடித்து அறுத்தார். அதில் பாதி செயின் அவர் கையிலும் பாதி கீழேயும் விழுந்துவிட்டது. அடித்ததில் அ.சா.1 மயக்கம் ஆகிவிட்டார். இரண்டு மூக்கிலும் அ.சா.1க்கு ரத்தம் வந்துவிட்டது. பிறகு எதிரிகள் அதன்பிறகும் கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். நாங்கள் காயம்பட்ட அ.சா.1ஐ தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகாரில் எழுதியவர் என்று உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

நான் சம்பவம் நடந்தபோது வீட்டிற்குள் இருந்தேன் என்றால் இல்லை. வீட்டுவாசலில் இருந்தேன். 2ம் எதிரி அடிக்க பயன்படுத்தியதாக சொல்லும் கட்டையை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மிரட்டும்போது நானும் அ.சா.1 மட்டும்தான் இருந்தோமா என்றால் நான், அ.சா.1 மற்றும் பொற்கலைச்செல்வி ஆகியோர்கள் இருந்தோம். புகாரை அ.சா.1 சொல்ல நான் எழுதினேன். நான் பாதி செயினைதான் எடுத்து வந்தேன், மீதி செயினை அவர்கள்தான் கொண்டு போய் இருக்க வேண்டும். 2ம் எதிரி கண்ணத்தில் அடித்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். எந்த கண்ணத்தில் அடித்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. என்னிடம் இருக்கும் பாதி செயின்போக மீதி செயின் என் அக்காவிடம் உள்ளது என்றால் இல்லை. புகாரை மறுநாள்தான் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுக்காமால் ஏன் மறுநாள் கொடுத்தோம் என்பதற்காக காரணத்தை போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. இரவு மருத்துவமனைக்கு சென்றுவிட்டு மறுநாள் காலை புகார் கொடுத்தோம். சாட்சி இராமகிருஷ்ணன் என் தம்பி. நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம். இறப்பு வீட்டில் பிரச்சனை நடந்ததா என்றால் இல்லை, எங்கள்வீட்டு வாசலில்தான் சம்பவம் நடந்தது. அ.சா.1ஐ நான் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை, என் தம்பி மகேஷ்வரன்தான் அழைத்துச் சென்றான். அ.சா.1 என் சகோதரி என்பதால் உண்மையை மறைத்து அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் , வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் எங்களுக்கும் சொத்துபிரச்சனை இருப்பதால் பொய்யாக புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களை அசிங்கமாக பேசவோ,

அடிக்கவோ, கொலைமிரட்டல் விடுக்கவோ இல்லை என்றும், எதிரிகள் உள்ளூர் என்பதால் தொடர்ச்சியாக எதிரிகளுடன் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. புகாரில் நான் எழுதியவர் என்று என் பெயரைதான் எழுதியுள்ளேன். புகாரில் ஒருவர்தான் கையொப்பம் போடவேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியாது.

மறு விசாரணை:இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

CC.No.211/2023

Deposition of witness for Prosecution அ.சா.4

பெயர்	:	பொற்கலைச்செல்வி
தகப்பனார்/கணவர் பெயர்	:	மகாலிங்கம்
கிராமம்	:	
தாலுகா	:	
தொழில்	:	
வயது	:	

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 05.02.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தூனுகுடி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1,2 மற்றும் எதிரிகளை தெரியும். கடந்த 30.05.2023 ம் தேதி இரவு 9.30 மணிக்கு எங்கள் ஊரில் நடந்த துக்கத்திற்கு என் மாமா மகேஷ்வரன் மற்றும் சித்தி இந்திரா வந்திருந்தார்கள். துக்கத்திற்கு போய்விட்டு எங்கள் வீட்டிற்கு முன்பாக வந்த எதிரிகள் இருவரும் என் மாமாவை கல்யாணம் பண்ண முடியவில்லை என்று தரக்குறைவாக பேசினார்கள். பிறகு அ.சா.1 ஐ மோசமான வார்த்தையை சொல்லி திட்டினார்கள். பிறகு அ.சா.1 ஏன் இப்படி பேசுகிறீகள், மரியாதையாக பேசுங்கள் என்று சொன்னார். பிறகு 1ம் எதிரி அப்படிதான் பேசுவோம் என்று சொன்னார். உண்னை வீட்டோடு தீயை வைத்து கொழுத்திவிடுவோம் என்று 1ம் எதிரி சொன்னார். 2ம் எதிரி வெட்டிவிடுவேன் என்று எங்களை பார்த்து சொன்னார். பேசிக்கொண்டிருக்கும்போது எதிரிகள் இருவரும் அ.சா.1 ன் முடியை பிடித்து இழுத்து கண்ணத்தில் எதிரிகள் இருவரும்

அறைந்து முதுகில் குத்திவிட்டார்கள். 1ம் எதிரி கம்பை எடுத்து அ.சா.1ன் தலையில் அடித்தார். நானும் அ.சா.2 ம் விலக்கபோனோம். அப்போது 1ம் எதிரி அ.சா.1ஐ போட்டு அடித்தார். 2ம் எதிரி அ.சா.2 ன் தாலி செயினை பிடித்து கண்ணத்தில் அறைந்தார். தாலி செயின் அறுந்து பாதி கீழே விழுந்து விட்டது. பாதி அவர் கையோடு போய்விட்டது. இழுத்ததில் எனது சித்தி கீழே விழுந்துவிட்டார். அ.சா.1க்கு கண்ணத்தின் இருபுறமும், மூக்கிலும் இருந்து எதிரிகள் அடித்ததில் இரத்தம் வந்தது. அ.சா.1க்கு மயக்கம் வருவதுபோல் இருந்ததும், மகேஷ்வரன் ஆம்புலன்ஸ் மூலம் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். போலீசார் இது சம்பந்தமாக விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம். போலீசார் என்னை விசாரித்தபோது என் மாமாவை தரக்குறைவாக பேசியதாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். புகாரை என் சித்தி இந்திரா எழுதினார். என் அம்மாவுக்கு எழுத படிக்க தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். புகாரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. தாலிசெயினில் பாதி அ.சா.1னிடமும், மீதி அ.சா.3டமும் உள்ள விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் பாதி செயின் எங்களிடம்தான் உள்ளது, மீதி பாதி செயினை பாஸ்கர் கொண்டுபோய்விட்டார். சம்பவம் நடந்தபோது நான் என் சித்தி மற்றும் அம்மா ஆகிய 3 பேரும்தான் இருந்தோம். சம்பவத்தை எங்கள் 3 பேரை தவிர வேற யாரும் பார்க்கவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி தரக்குறைவாக பேசவில்லை என்றும், வீட்டை கொழுத்திவிடுவதாக மிரட்டவில்லை என்றும், வெட்டி கொன்றுவிடுவோம் என்றும் மிரட்டவில்லை என்றும், முதுகில் காயம் ஏற்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் அ.சா.3 க்கும் சொத்து பிரச்சனை காரணமாக கொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

CC.No.211/2023

Deposition of witness for Prosecution அ.சா.5

பெயர்	:	மகேஷ்வரன்
தகப்பனார்/கணவர் பெயர்	:	கார்மேகம்
கிராமம்	:	
தாலுகா	:	
தொழில்	:	
வயது	:	

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 05.02.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தூனுகுடியில் குடியிருந்து உணவகத்தில் வேலை பார்க்கிறேன். அ.சா.1,3,4 மற்றும் எதிரிகளை தெரியும். கடந்த 30.05.2023 ம் தேதி துக்க நிகழ்விற்காக சுடுகாட்டிற்கு சென்றபோது என் மச்சானின் துக்க நிகழ்விற்கு ஏன்வந்தாய் என்று சண்டை போட்டார். அதன்பிறகு அன்று இரவு 9 மணிக்குமேல் இருக்கும். எங்கள் வீட்டு முன்பாகதுக்க நிகழ்விற்கு சென்றுவிட்டு வரும்போது எதிரிகள் இருவரும் அ.சா.1 வீட்டில் சண்டைபோட்டார்கள். நான் வருவதற்கு முன்பே எதிரிகள் இருவரும் வந்து என் அக்காவிடம் பேசி சண்டை போட்டு அடித்துவிட்டார்கள். நான் வந்து பார்த்தபோது அ.சா.1 க்கு மூக்கில் ரத்தம் வந்தது. அ.சா.3 தன்னை அடித்து

தன்னுடைய செயினில் பாதியை அறுத்துக் கொண்டு போய்விட்டதாக சொன்னார். செயினில் பாதி மட்டுமே அவர்களிடம் இருந்தது. காயம்பட்ட அ.சா.1 தேவகோட்டை அரசு மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

கடந்த 30.05.2023 ம் தேதி நடந்ததாக சொல்லும் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் வரும்போது அ.சா.3 நல்ல முறையில் இருந்தாரா என்றால் ஆமாம், செயினை பொறுக்கிக்கொண்டிருந்தார். அ.சா.1 ஐ யார் மூக்கில் குத்தினார்கள் என்று தெரியுமா என்றால், எதிரிகள் குத்தினார்கள் என்று அ.சா.1 கூறினார். போலீசார் விசாரணையில் சம்பத்தை நேரில் பார்க்கவில்லை என்றுதான் சொல்லிருந்தேன். அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்துக்கொண்டு நான் மட்டும்தான் சென்றேன். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை, எதிரிக்கும் எனக்கும் சொத்து பிரச்சனை இருப்பதால் அவர்களை பழிவாங்கும் உள்நோக்கத்துடன் அ.சா.1 க்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.